பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 04 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>ஆகாஷவாணி செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் தமிழகத்தின் உதகையில் பல்கலைக் கழக துணைவேந்தர்கள் மாநாட்டில் தற்போது பங்கேற்று உரையாற்றி வருகிறார்.

2. ஜம்மு கஷ்மீரின் பாதுகாப்பு நிலைமையை ஆய்வு செய்வதற்காக ராணுவ தளபதி ஜென்றல் உபேந்திர துவிவேதி ஸ்ரீநகர் சென்றடைந்தார்.

3. தீவிரவாத தாக்குதல்களை முறியடித்து இந்தியா மேலும் வேகமாக வளர்ச்சியடையும் என மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவர்களின் திறனை மேம்படுத்த புதிய இயக்கம் செயல்படுத்தப்படும் என பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் தமிழகத்தின் உதகையில் பல்கலைக் கழக துணைவேந்தர்கள் மாநாட்டில் தற்போது பங்கேற்று உரையாற்றி வருகிறார்.

முன்னதாக, இந்த மாநாட்டிற்கு தலைமை வகித்து பேசிய ஆளுநர் திரு ஆர் என் ரவி, தமிழகத்தில் உள்ள அரசு பல்கலைக் கழகங்களை விட தனியார் நிகர்நிலை பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதாக கூறினார்.

அரசு பல்கலைக் கழகங்கள் ஜிஆர்எப் தரவரிசையில் இடம்பெறவில்லை என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக தமிழகத்தில் 3 நாள் பயணமாக கோவை வந்த குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கரை மாநில அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் திரு பவன்குமார் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இன்றும் நாளையும் நீலகிரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் குடியரசு துணைத் தலைவர் நாளை மறுநாள் கோவை வேளாண் பல்கலைக் கழக மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

<>><><><<>

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பகுதியை ஆய்வு செய்வதற்காக ராணுவத் தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி, இன்று ஸ்ரீநகர் சென்றடைந்தார்.

ராணுவத்தின் வடபிராந்திய தளபதி லெப்டினன்ட் ஜென்ரல் சுசீந்திர குமார் உள்ளிட்ட உயரதிகாரிகளும் அவருடன் சென்றுள்ளனர்.

பஹல்காம் பகுதியில் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ராணுவ தளபதி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இதனிடையே, பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட லஷ்கர் ஈ தொய்பா தீவிரவாதிகளான அடில் ஹுசைன் தொக்கர் மற்றும் ஆசிப் ஷேக் ஆகியோரது வீடுகள் குண்டுவெடிப்பில் இடிந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனந்த்நாக்கில் உள்ள இவர்களது வீடுகளிலும் பாதுகாப்புப் படையினர் சோதனை நடத்திக் கொண்டிருந்தபோது அந்த வீடுகளில் ஏற்கனவே பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறி வீடுகள் தரைமட்டமானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<>><><><<>

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து தில்லியில் இன்று வணிகர்கள் முழு அடைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட வணிக சங்கங்கள் விடுத்த அழைப்பின் பேரில், இந்த முழு அடைப்பு நடைபெறுகிறது.

இதன்காரணமாக தில்லியில் உள்ள முக்கிய சந்தைப் பகுதிகளான சதர்பஜார், சாந்தினி சவுக், நயா பஜார், ஜும்மா மசூதி பகுதிகளில் உள்ள கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டுள்ளன.

ஜவுளி வியாபாரிகள், வாசனை திரவிய விற்பனையாளர்கள், பாத்திரம் மற்றும் நகை வியாபாரிகளும் இந்த முழு அடைப்பில் பங்கேற்றுள்ளனர்.

<>><><><<>

தீவிரவாத தாக்குதல்களை முறியடித்து இந்தியா மேலும் வேகமாக வளர்ச்சியடையும் என மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பஹல்காமில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் நாட்டின் ஆன்மாவை சிதைக்கும் நோக்கில் இந்த தாக்குதலில் ஈடுபட்டதாக கூறினார்.

ஆனால், நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்கள் தீவிரவாதிகளுக்கு எதிராக ஓரணியில் திரண்டிருப்பதாகவும் திரு ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<><><><>

நாட்டில் பசுமை எரிபொருள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், சிஎன்ஜி எரிபொருள் விற்பனை மையங்கள் கடந்த 10 ஆண்டுகளில் 20 மடங்கு அதிகரித்துள்ளதாக பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வீடுகளுக்கான குழாய் வழி சமையல் எரிவாயு இணைப்பும் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எல்பிஜி சிலிண்டர் பயன்பாடும் இரட்டிப்பாகி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சாதனைகள் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான அடித்தளத்தை வலுப்படுத்தி இருப்பதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

<><><><>

சிக்கிம் மாநிலத்தில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவால் சுற்றுலா சென்ற சுமார் ஆயிரம் பயணிகள் அங்கு சிக்கியுள்ளனர்.

இவர்களை மீட்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

Chungthang பகுதியில் மட்டும் 200 க்கும் மேற்பட்ட சுற்றுலா வாகனங்கள் சிக்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, நிலச்சரிவு காரணமாக இம்மாநிலத்தின் வடபகுதியில் இன்று சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்றும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படுவதாகவும் மங்கான் மாவட்ட ஆட்சியர் திரு ஆனந்த் ஜெயின் அறிவித்துள்ளார்.

Chungthang லிருந்து காங்டாக் செல்லும் சாலை போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் Lachen மற்றும் Lachung பகுதியில் சிக்கியிருப்பவர்கள் இந்த வழியை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<>><><<>

நாட்டில் கடந்த பிப்ரவரி மாதத்தில் 15 லட்சத்து 43 ஆயிரம் தொழிலாளர்கள் புதிதாக ஈஎஸ்ஐ திட்டத்தில் இணைந்துள்ளனர் என மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதிதாக பணியில் சேர்ந்துள்ள இந்த தொழிலாளர்களில் 7 லட்சத்து 36 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் 25 வயதிற்குட்பட்டவர்கள் என அந்த அமைச்சகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மேலும் பல்வேறு மாநிலங்களில் உள்ள 23 ஆயிரம் புதிய தொழில் நிறுவனங்கள் ஈஎஸ்ஐ சமூக பாதுகாப்பு திட்டத்தில் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<>><><<>

உலக மலேரியா தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலகில் மலேரியா நோயை கட்டுப்படுத்த அரசியல் ரீதியான நடவடிக்கைகளை விரைவுப்படுத்துவதுடன் போதுமான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

<>><><<>

தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவர்களின் திறனை மேம்படுத்த 19 கோடி ரூபாய் செலவில் முனைப்பு இயக்கம் மேற்கொள்ளப்படும் என பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், தமிழகத்தில் உள்ள நூலக கட்டிடங்கள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

(சவுண்ட் பைட் – அன்பில் – 37 செகண்ட்ஸ்)

<>><><<>

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப் 4 தேர்வுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தேர்வு ஆணையம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அடுத்த மாதம் 24 ஆம் தேதி கடைசிநாளாகும்.

குரூப் 4-ல் அடங்கிய இளநிலை உதவியாளர், தட்டச்சர், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட 3 ஆயிரத்து 935 பணியிடங்களுக்கு வரும் ஜூலை மாதம் 12 ஆம் தேதி தேர்வு நடைபெறவுள்ளது.

<>><><><>

இந்தியா – சவூதி அரேபியா ராணுவ உயரதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

வருடாந்திர ராணுவ ஒத்துழைப்பு திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன் இருநாடுகளும் சதா தன்சீக் என்ற பெயரில் கூட்டு பயிற்சியில் ஈடுபடுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் ராணுவ கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பர நலன் சார்ந்த பரிமாற்றம் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<>><><><>

கடந்த ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி குறித்து உலக வங்கி பாராட்டு தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் தொழில் மற்றும் சுற்றுலாதுறையின் வலுவான செயல்பாடுகளால், வளர்ச்சி விகிதம் 5 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்ததாக உலக வங்கி தெரிவித்திருப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட வலுவான சீர்திருத்தங்களால், அந்நாட்டின் வளர்ச்சி ஸ்திரமான நிலையை எட்டியுள்ளதாக உலக வங்கி தெரிவித்திருப்பதை அந்நாட்டு அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

நடப்பாண்டில் இலங்கையின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 3 புள்ளி ஐந்து சதவீதம் என்ற அளவிலேயே நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<>><><<>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-----------

ஆசிய யோகாசன சாம்பியன் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் 21 நாடுகளைச் சேர்ந்த 170 பேர் பங்கேற்கின்றனர்.

-------------

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Zeel Desai** இன்று பல்கேரியாவின் **Lidia Encheva** – வை எதிர்கொள்கிறார்.

<>><><<>

<u>மீண்டும் தலைப்புச் செய்திகள்</u>

1. ஆரோக்கியமான விவாதங்கள் கல்வித் துறையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

2. ஜம்மு கஷ்மீரின் பாதுகாப்பு நிலைமையை ஆய்வு செய்வதற்காக ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி ஸ்ரீநகர் சென்றுள்ளார்.

3. தீவிரவாத தாக்குதல்களை முறியடித்து இந்தியா மேலும் வேகமாக வளர்ச்சியடையும் என மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவர்களின் திறனை மேம்படுத்த புதிய இயக்கம் செயல்படுத்தப்படும் என பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.